# பத்திரிக்கை செய்தி

## மழலையர் ஆரம்ப பள்ளிக்கு கட்டிட உரிமம் வழங்குவதற்காக லஞ்சம் ரூ.42,000/- கேட்டு பெற்ற துணை வட்டாட்சியர் மற்றும் வட்டாட்சியர் கைது

புகார்தாரர் திரு.அரவிந்தன், கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர், கிருஷ்ணாநகரை சேர்ந்தவர். புகார்தாரர் லிட்டில் வில்லே பிரிமியம் ஆரம்ப நிலை பள்ளி என்று இயங்கிக்கொண்டிருக்கும் மலழையர் பள்ளியை வாங்க முடிவு செய்தார். மேலும் அரசிடம் இருந்து அங்கீகார கட்டிட உரிமம் பெறுவதற்காக ஜனவரி மாதம் 2023ம் வருடம் ஓசூர் தாலுகா அலுவலகத்தில் விண்ணப்பித்திருந்தார். விண்ணப்பத்தினை பரிசீலனை செய்வதற்கு திருமதி.மங்கையர்கரசி, துணை வட்டாட்சியர், ஒசூர் தாலுகா, கிருஷ்ணகிரி மாவட்டம் அவர்கள் தனக்கும் திரு.கவாஸ்கர், வட்டாட்சியர், ஒசூர் தாலுகா, கிருஷ்ணகிரி மாவட்டம் அவர்களுக்கும் சேர்த்து லஞ்சமாக ரூ.42,000/- கொடுக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தியுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் திரு.அரவிந்தன் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை கிருஷ்ணகிரி பிரிவில் புகார் மனு ஒன்று அளித்தார். இப்புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு இன்று 14.02.2023 பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின்போது திருமதி.மங்கையர்கரசி, துணை வட்டாட்சியர் அவர்களின் உத்தரவின்பேரில் புகார்தாரர், திரு.கவாஸ்கர், வட்டாட்சியர் அவர்களை சந்திக்க சென்றார். அப்போது வட்டாட்சியர் அவர்கள் திரு.திம்மராயன், அலுவலக உதவியாளர் என்பவர் மூலமாக லஞ்ச பணமான ரூ.42,000/-யை புகார்தாரரிடமிருந்து கேட்டு பெற்ற போது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் திருமதி.மங்கையர்கரசி மற்றும் திரு.கவாஸ்கர் ஆகிய இருவரும் கைது செய்யப்பட்டனர்.

# PRESS NOTE

## DEPUTY TAHSILDAR AND TAHSILDAR ARRESTED FOR DEMAND AND OBTAINMENT OF BRIBE RS.42,000/- FOR ISSUING BUILDING LICENCE TO NURSERY SCHOOL

The complainant Tr.Aravindan, is residing at Krishna Nagar, Hosur, Krishnagiri District. Complainant had decided to purchase a nursery school which is being run in the name of Little Ville Premium Pre School. In this connection, he had approached the Hosur taluk office seeking building license in January 2023 for getting recognition from the government. Tmt.Magayarkarasi, Deputy Tahsildar, Hosur Taluk, Krishnagiri district and Tr.Gavaskar, Tahsildar, Hosur Taluk, Krishnagiri district demanded Rs.42,000/- as bribe for preparation and processing the file for getting Building license in the name of the school. Not willing to give bribe, the complainant approached the Vigilance and Anti-Corruption, Krishnagiri detachment and gave complaint. In this connection a case was registered and a trap was organized. Today 14.02.2023, on the direction of Tmt.Mangayarkarasi, Deputy Tahsildar, the complainant met Tr.Gavaskar, Tahsildar at his room. Tr.Gavaskar, Tahsildar directed Tr.Thimmarayan, OA to receive the bribe amount of Rs.42,000/- from the complainant. Accordingly, Tr.Thimmarayan, OA received the bribe amount. In this connection Tmt.Mangayarkarasi and Tr.Gavaskar were arrested.